செய்தி வெளியீடு எண்:604 நாள் :9.11.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.11.2013 அன்று தலைமைச் செயகலத்தில், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோயிலில் 26 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 43 கோடியே 45 லட்சத்து 3 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 163 கால்நடை மருந்தகக் கட்டடங்கள், 2 கால்நடை நோய் புலனாய்வு பிரிவு கட்டடங்கள் மற்றும் ஒரு உறைவிந்து வங்கி கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்திடவும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் கால்நடைகளின் பங்கு இன்றியமையாததாகும். கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகள் நன்கு பராமரித்திடவும், மனிதர்களுக்கு இணையான மேம்பட்ட தரமான மருத்துவ சிகிச்சை கால்நடைகளுக்கு அளித்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் 2 ; கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 ; கடலூர் மாவட்டத்தில் 21 ; தர்மபுரி மாவட்டத்தில் 9 ; திண்டுக்கல் மாவட்டத்தில் 3 ; ஈரோடு மாவட்டத்தில் 10 ; காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2 ; கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 ; கரூர் மாவட்டத்தில் 1 ; கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 9 ; மதுரை மாவட்டத்தில் 6 ; நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3 ; நாமக்கல் மாவட்டத்தில் 1 ; புதுக்கோட்டை மாவட்டத்தில் 8 ; இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 ; சிவகங்கை மாவட்டத்தில் 5 ; தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 ; தேனி மாவட்டத்தில் 6 ; திருவள்ளூர் மாவட்டத்தில் 7 ; திருவண்ணாமலை மாவட்டத்தில் 11 ; திருவாரூர் மாவட்டத்தில் 2 ; தூத்துக்குடி மாவட்டத்தில் 8 ; திருப்பூர் மாவட்டத்தில் 4 ; திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 12 ; விருதுநகர் மாவட்டத்தில் 8 ; வேலூர் மாவட்டத்தில்

6 ; என மொத்தம் 42 கோடியே 37 லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 164 கால்நடை மருந்தகக் கட்டடங்களையும்;

கிருஷ்ணகிரி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கால்நடை நோய் புலனாய்வு பிரிவு கட்டடங்களையும்;

திருவண்ணாமலை மாவட்டத்தில் 43 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உறைவிந்து வங்கி கட்டடத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.11.2013 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்த கால்நடை மருந்தகங்கள் அறுவை சிகிச்சை அறை, ஆய்வக அறை, சிகிச்சைக் கூடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இந்த கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்பட்டதன் மூலம் சுமார் 20 லட்சம் கால்நடைகள் பயனடையும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு டி.கே.எம். சின்னய்யா, தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் முனைவர் ஆர். பழனிச்சாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 9.11.2013